(4) 1975—76-ம் ஆண்டின் செலவிற்கான முன்பண நிதிக் கோரிக்கைகள் (செலவினக்கணக்கின் மீது வாக்கெடுப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பேரவையின் முடிவிற்கு வைக்கிறேன் :—

"முன்பண மானியக் கோரிக்கைகளடங்கிய 20-3-1975 தேதியிட்ட அறிக்கையில் இரண்டாவது வரிசையில் 1 முதல் 57 முடிய எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே நாலாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1976-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிய உள்ள ஆண்டிற்கான செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

டாக்டர் எச். வி. ஹாண்டே: 120 கோடி ரூபாய்க்கு கேட்கிருர்கள், விவாதம் இல்லாமல் எப்படி அவ்வளவு ரூபாயை அனுமதிக்க முடியும், உங்களைக் கேட்கிறேன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள். என்னை ஏன் கேட்கிறீர்கள், உங்கள் தலைவரைக் கேளுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதம் இல்லாமல் எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுவிட்ட பிறகு இங்கே வந்து என்னை ஏன் கேட்க வேண்டும், உங்கள் தலைவரைக் கேளுங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று இம்மாதிரி சொல்வது சரியல்ல. அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதம் இல்லாமல் எடுத்துக் கொள்ளலாம் என்பதை எல்லாத் தலைவர்களும் ஒத்துக்கொண்டோம். ஆகவே, அதிலே எந்தவிதமான பிரச்னையும் இல்லை. கட்சித் தலைவர் ஏதாவது தப்பாகச் சொன்னால் கட்சி உறுப்பினர்கள் அந்தத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்கலாம், ஏதோ கணக்குக் கூட்டலில் விடுதல் இருக்கிறது என்று சொன்னார்கள். அதைத் திருத்திக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பட்டது.

[பேரவையினால் நிறைவேற்றப்பட்ட நிதிக் கோரிக்கைகளுக்கான தீர்மானங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

"நிதிக்கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை.

நிதிக் கோரிக்கை எண் 2 —மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள், சட்டங்கள் நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள், சட்டங்கள் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ.99,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்–நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு.

" நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 46,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 7—மாநில சட்ட மன்றம்.

" நிதிக் கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

" நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 48,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

" நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,58,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 10— பால் வழங்குத் திட்டங்கள்.

" நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."